**செய்தி வெளியீடு எண்.744** **நாள்.21.10.2009**

**மாண்புமிகு உணவு அமைச்சர் திரு எ.வ. வேலு அவர்கள் கோயம்புத்தூர் மாவட்ட நியாயவிலைக் கடைகளில் ஆய்வு**

**பொது விநியோகத்திட்டத்தின் கீழ் அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் தேவைக்கேற்ப 100 சதவீதம் அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும் – மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆணை**

ஈரோடு மாவட்ட ஆய்வினைத் தொடர்ந்து மாண்புமிகு உணவுத் துறைஅமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (21.10.2009) ஆய்வு குழுவினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர்களுடன் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

கோவை மாவட்டம், சூலூர் வட்டம், வடுகப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் வடுகப்பாளையம் நியாயவிலைக் கடையிலும், செஞ்சேரி மலையடிப்பாளையம் உழவர் பணி கூட்டுறவு சங்கத்தின் வாரப்பட்டி நியாயவிலைக் கடையிலும், பொள்ளாச்சி வடக்கு வட்டம், காட்டாம்பட்டிபுதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் காட்டாம்பட்டிபுதூர் நியாயவிலைக் கடையிலும், பொள்ளாச்சி பல்லடம் சாலையில் பொள்ளாச்சி மொத்த விற்பனைக் கூட்டுறவு பண்டகசாலை நியாயவிலைக் கடையிலும், தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தின் கோட்டைமேடு 2, அங்காடி எண்.37லும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது கடையில் பொருட்கள் வாங்க வந்த பொது மக்களிடம் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் அவர்களுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என்பதையும், ஒரு சில குடும்ப அட்டைகளைப் பெற்று அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் விவரங்களை அ பதிவேட்டில் முறையாக பதியப்பட்டுள்ளதா என்பதையும் கண்டறிந்தார்கள். கோட்டைமேடு 2, அங்காடி எண்.37ல் பொது மக்களிடம் விசாரணை செய்தபோது தங்களுக்கு அனைத்து பொருட்களும் முறையாக எடை குறைவில்லாமல் வழங்கப்படுவதாக தெரிவித்ததைக் கேட்டு அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

ஆய்வின்போது ஒதுக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்படுவதில் வட்ட வழங்கல் அலுவலர்கள் காலதாமதம் செய்கிறார்கள் என்பதை அறிந்து ஒதுக்கீட்டு ஆணையை 2ஆம் தேதிக்குள் மாதா மாதம் பிறப்பிக்க வேண்டும் என்று இதனை ‘அ’ பதிவேடுகளை முறையாக சரிபார்த்தபின் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று வட்ட வழங்கல் அலுவலர்களை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

சூலுார் வட்டம், காட்டாம்பட்டிபுதூர் பகுதியில் வீடு வீடாகச் சென்று பொது மக்களிடம் நியாயவிலைக் கடைகளின் மூலம் அனைத்து பொருட்களும் முறையாக அவர்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தும், அவர்கள் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த பொருட்களை வீடுகளிலிருந்து எடுத்து வரச் சொல்லி அவற்றின் தரத்தையும் சோதனை செய்து பார்த்தார்கள்.

வீதி வீதியாக சென்று நியாயவிலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை தொடர்ந்து மாலை 4.00 மணிக்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள் கூட்டத்திற்கு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி முன் வகித்தார்.

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் புதிய அட்டை கோரி விண்ணப்பிக்கும் மனுக்களை பரிசீலித்து உண்மையான குடும்ப அட்டைதாரர்களுக்கு 60 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்படும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நியாயவிலைக் கடைகளில் ஆய்வில் ஈடுபட்டபோது பெரும்பாலான கடைகளில் தேவையான அளவில் அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைத்துக் கொண்டும், அப்பொருட்களின் மாதிரியை பொது மக்கள் பார்வைக்கு வைக்காமலும் இருந்தது கண்டறியப்பட்டது. எனவே, பொருட்களை முறையாக காட்சிபடுத்தியும், அவ்வப்போது கேட்கும் அளவில் பொது மக்களுக்கு வழங்கியும் பொருட்கள் தேக்கம் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்கள். மேலும், சர்க்கரை குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு அரிசி மற்றும் சர்க்கரை இதர அனைத்து பொருட்களும் வழங்கப்பட வேண்டும் இதை அலுவலகர்கள் உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு கடைக்கும் உரிய “அ” பதிவேடுகளை மாதம் ஒருமுறை வட்ட வழங்கல் அலுவலர்கள் அ பதிவேடுகளில் முழுமையாக திருத்தங்கள் மேற்கொண்டு “அ” பதிவேடுகளில் கையொப்பமிட்டும், மாதாமாதம் இது போன்று சரிபார்த்த பின்னரே நியாயவிலைக் கடைகளுக்கு பொருள் ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு செய்ய தவறும் வட்ட வழங்கல் அலுவலர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். அச்சடித்த குடும்ப அட்டையை மனுதாரருக்கு வழங்கும்போது வேறு இடத்தில் குடும்ப அட்டைக்காக விண்ணப்பிக்கக் கூடாது என்பதற்காக நீக்கல் சான்றின் அசல் சான்றைப் **(Original)** பெற்று விண்ணப்பித்தினை பரிசீலிக்க வேண்டும். நவம்பர் **2009** மாதம்

முதல்அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் அட்டைகளின் உரிய ஒதுக்கீட்டின் அடிப்படையில் அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் 100 % அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் இதனை அனைத்து குடும்ப அட்டைதரார்களுக்கு முறையாக விநியோகம் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். 100 சதவீதம் அரிசி ஒதுக்கீடு வழங்கிய பின் பச்சை நிற அட்டை வைத்துள்ளவர்களுக்கு அட்டையின் தகுதியின்படி மாதா மாதம் 12 கிலோ முதல் 20 கிலோ வரையிலும் அந்தியோதயா அன்ன யோஜனா (AAY) பச்சை நிற அட்டைகளுக்கு 35 கிலோ அரிசியும் முழு அளவில் அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதில் தவறு செய்யும் நியாயவிலைக் கடை பணியாளர்கள் மீது கடும் ஒழுங்கு மற்றும் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்க மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு உத்தரவிட்டார்கள். கடத்தலில் ஈடுபடும் நியாய விலை கடை பணியாளர்கள் மீது கள்ள சந்தை தடுப்பு காவல் சட்டம் பாயும் என்று அமைச்சர் அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள்.

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து பொருட்களும் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதை மாவட்ட வழங்கல் அலுவலரும், மண்டல இணைப்பதிவாளர்களும் முனைப்புடன் கண்காணிக்க வேண்டும். தரமான பொருட்கள் மட்டுமே கடைகளுக்கு கிடங்குகளிலிருந்து அனுப்பப்பட வேண்டும். தரமற்ற பொருட்களை கடைகளுக்கு அனுப்பும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதை மீறும் நியாயவிலைக் கடை ஊழியர்கள் மீதும், சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத் தனி அலுவலர் ஆகியோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்கள். மேலும், கிடங்குகளிலிருந்து அனுப்பப்படும் பொருட்கள் தான் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை மண்டல மேலாளர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். அதன் பிறகு மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்பட அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், திரு. க. ராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, முனைவர் பி. உமாநாத், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**